# நவம்பர் – 25 – பொதுக்கால 34ம் ஞாயிறு

## கிறிஸ்து அரசர் பெருவிழா

## “எனதுஆட்சி இவ்வுலகுஆட்சிபோன்றதுஅல்ல” யோவான் 18:36

## முதல் வாசகம் : தானியேல் 7 : 13 - 14

அந்நாட்களில் இரவில் நான் கண்ட காட்சியாவது : வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார். இதோ! தொன்மை வாய்ந்தவர் அருகில் அவர் வந்தார். அவர் திருமுன் கொண்டு வரப்பட்டார். ஆட்சியுரிமையும், மாட்சியும் அரசும் அவருக்கு கொடுக்கப்பட்டன. எல்லா இனத்தாரும், நாட்டினரும், மொழியினரும் அவரை வழிபட வேண்டும். அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும். அதற்கு முடிவே இராது. அவரது அரசு அழிந்து போகாது.

**பதில்பாடல் :** ஆண்டவர் ஆட்சி செய்கின்றார். மாட்சியை ஆடையாக அணிந்துள்ளார்.

## இரண்டாம் வாசகம் : திருவெளிப்பாடு1 : 5 – 8

இந்தக் கிறிஸ்துவே நம்பிக்கைக்குரிய சாட்சி. இறந்தோருள் முதலில் உயிர்பெற்று எழுந்தவர் மண்ணுலக அரசர்களுக்குத் தலைவர். இவர் நம்மீது அன்புகூர்ந்தார் தமது சாவு வாயிலாக நம் பாவங்களிலிருந்து நம்மை விடுவித்தார்.ஆட்சி உரிமை பெற்றவர்களாக, அதாவது நம் கடவுளும் தந்தையுமானவருக்கு ஊழியம் புரியும் குருக்களாக நம்மை ஏற்படுத்தினார். இவருக்கே மாட்சியும் ஆற்றலும் என்றென்றும் உரியன. ஆமென். இதோ! அவர் மேகங்கள் சூழ வருகின்றார். அனைவரும் அவரைக் காண்பர் அவரை ஊடுருவக் குத்தியோரும் காண்பர். அவர்பொருட்டு மண்ணுலகின் குலத்தார் அனைவரும் மாரடித்துப் புலம்புவர். இது உண்மை, ஆமென்!”அகரமும் னகரமும் நானே” என்கிறார் கடவுளாகிய ஆண்டவர். இருந்தவரும்இ இருக்கின்றவரும், வரவிருக்கின்றவரும், எல்லாம் வல்லவரும் அவரே.

## நற்செய்தி : யோவான் 18 : 33 - 37

அக்காலத்தில் பிலாத்து மீண்டும் ஆளுநர் மாளிகைக்குள் சென்று இயேசுவைக் கூப்பிட்டு, அவரிடம், ”நீ யூதரின் அரசனா?” என்று கேட்டான்.இயேசு மறுமொழியாக, ”நீராக இதைக் கேட்கிறீரா? அல்லது மற்றவர்கள் என்னைப்பற்றி உம்மிடம் சொன்னதை வைத்துக் கேட்கிறீரா?” என்றுகேட்டார்.அதற்கு பிலாத்து, ”நான் ஒரு யூதனா, என்ன? உன் இனத்தவரும் தலைமைக் குருக்களும் தானே உன்னை என்னிடம் ஒப்புவித்தார்கள். நீ என்னசெய்தாய்?” என்றுகேட்டான்.இயேசு மறுமொழியாக, ”எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல. அது இவ்வுலக ஆட்சி போன்றதாய் இருந்திருந்தால் நான் யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்படாதவாறு என்காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால் என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல” என்றார்.பிலாத்து அவரிடம், ”அப்படியானால் நீ அரசன்தானோ?” என்றுகேட்டான். அதற்கு இயேசு, ”அரசன் என்று நீர்சொல்கிறீர். உண்மையை எடுத்துரைப்பதே என்பணி. இதற்காகவே நான் பிறந்தேன் இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என்குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்” என்றார்.

**தியானம்:** இன்று கிறிஸ்து அரசர் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். இயேசுக் கிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்த காலத்தில் தன்னை அரசனாகக் காட்டிக்கொள்ளவில்லை. மக்கள் அவரை அரசனாக்க விரும்பிய போது அவர்களிடமிருந்து விலகி தனியாகச் சென்றார். “நீ யூதரின் அரசனா?” என்று பிலாத்து வினாவியபோது “எனது ஆட்சி இவ்வுலக ஆட்சிபோன்றது அல்ல” (யோவான். 18:36) எனவிடையளிக்கின்றார். அவரே முதலும் முடிவுமாக இருக்கின்றார். இவ்வுலகு ஆட்சிகளில் காணப்படுவது போன்று அதிகாரம், அடக்குமுறை, வன்முறைகளுக்கு இடமேயில்லை. மாறாக அவரது அரசு உண்மையின் அரசு, வாழ்வு தரும் அரசு, புனிதமும் அருளும் கொண்ட அரசு, நீதியின் அரசு. ஆகவே தான் அவரது ஆட்சிக்கு முடிவே இராது. ஆவரை பின்பற்றுகின்ற நாமும் நீதியில், அன்பில் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இறைமகன் கிறிஸ்துவே எம்மை ஆள்கின்ற அரசர். நாம் அவரது அன்புக்குரிய மக்கள், அவரை விசுவசிப்போர், நற்செய்தியில் நடப்போர், இயேசுவை அறியாது ஆனால் அவரது உண்மை அன்புவழியில் நடக்கும் நல்ல உள்ளம் படைத்தோர், அனைவருக்கும் தம் இறையாட்சியில் பங்கு கொடுத்துக்கொண்டே வருகின்றார். இவ்வாறு கொடுத்துக் கொண்டே இருப்பதால் தான் கிறிஸ்து அரசரின் ஆட்சி மண்ணுலகை நிறைத்து விண்ணுலகிற்குள்ளும் நுழைந்து மாட்சி பெற்றுவளர்கின்றது. இன, மொழி, பேதமின்றி பலநாடுகளைச் சேர்ந்தோரும் இதில் அடங்குகினறனர். தன் உயிரைக் கொடுத்து அந்த இதய அரசை நிறுவினார். உண்மைக்குகுரல் கொடுப்போர். நீதிக்கு சாட்சியாவோர், அமைதிக்கு தூது செல்வோர், பிறர் வாழ தம்மையே தீபமாக்குவார் .பேதமின்றி பணிசெய்வோர் அனைவரும் அவரின் ஆட்சியில் உரிமை பெற்றவராவர்.